சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திரு.க.கல்யாணசுந்தர் –வரித்தண்டலராக கருணையடிப்படையில் 16.02.2017 முற்பகல் முதல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (3ப) எண்.12 நாள்: 20.05.2020

(திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, வைகாசி–07

பேரூராட்சிகள் இயக்ககம்
13 AUG 2020
சென்னை-28.

படிக்க:

1. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.2249/2013/பேரூ.2, நாள்.11.02.2017.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1119/2018/அ9 நாள்.13.02.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

*****

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி, நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில் ஆயில் மஸ்தூராகப் பணிபுரிந்தபோது 25.09.2007–ல் பணியிடைக் காலமான திரு.கோ.கண்ணதாசன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.க.கல்யாணசுந்தர் என்பவருக்கு கருணையடிப்படையில் வரித்தண்டலராக நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டு, 16.02.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியரின் பணியினை அவர் வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாளான 16.02.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் சூழலில், நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில் ஆயில் மஸ்தூராகப் பணிபுரிந்தபோது 25.09.2007–ல் பணியிடைக் காலமான திரு.கோ.கண்ணதாசன் என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையிலும் தனியரின் கல்வி தொடர்பான சான்றுகள் மற்றும் இது தொடர்பான ஆவணங்களை பரிசீலினை செய்ததின் அடிப்படையிலும் காலஞ்சென்றவரின் வாரிசான திரு.க.கல்யாணசுந்தர் என்பவர் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சியில் கருணையடிப்படையில் வரித்தண்டலராக தற்காலிகமாக

பணி நியமனம் செய்யப்பட்ட நிலையில், அவரது பணியினை பணியில் சேர்ந்த நாளான 16.02.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யக் கோரும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.க.கல்யாணசுந்தர் என்பவரின் பணியினை 16.02.2017 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் நடைமுறையிலுள்ள விதிகளின்படி வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அதனை பெற தனியர் தகுதியுடையவராகிறார். இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா. எண்.6165/(டி.1)/2020, நாள். 04.05.2020–ல் மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அ.சா. எண்.11431/ஜி.2/2020–1, நாள்.12.05.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

திரு.க.கல்யாணசுந்தர், வரித்தண்டலர்,
தரங்கம்பாடி பேரூராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்,
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக).
பேரூராட்சிகளின் இயக்குநர்,
8வது தளம், நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.
பேரூராட்சி உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

செயல் அலுவலர்
குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி
மயிலாடுதுறை மாவட்டம்

**நகல் :-**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி.1) துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி.2)துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

20/5/2020
பிரிவு அலுவலர்
20/5/20